| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| சா.சேதுராமவர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி<br>அலுவலர்கள் மற்றும்<br>இணை இயக்குநர்(கல்வி), பாண்டிச்சேரி. |

ந.க.எண். 026826 / எச்.1 /2021 நாள். 08.02.2022

ஐயா / அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – 2021–2022–ஆம் கல்வியாண்டில் பள்ளியில் பயிலும் பத்தாம் வகுப்பு / மேல்நிலை இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான முதல் திருப்புதல் தேர்வுகள் – 10.02.2022 அன்று நடைபெறவிருந்த பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு திருப்புதல் தேர்வு தேதி மாற்றம் குறித்த அறிவுரைகள் – தொடர்பாக.

பார்வை :
1. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம், நாள்:28.12.2021.
2. இதே எண்ணிட்ட செய்திக்குறிப்பு , நாள்.31.01.2022.
3. இவ்வலுவலக கடித ந.க.எண்.12/மந்தணம்/2021, நாள்.29.12.2021.
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம், நாள்: 31.01.2022 .

------

2021–2022–ஆம் கல்வியாண்டில் பள்ளியில் பயிலும் பத்தாம் வகுப்பு / மேல்நிலை இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான முதல் திருப்புதல் தேர்வுகள் முறையே **09.02.2022** முதல் **15.02.2022** மற்றும் **09.02.2022** முதல் **16.02.2022** வரை நடைபெறுமென ஏற்கனவே பார்வையில் 4–இல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் **10.02.2022** (வியாழக்கிழமை) அன்று உள்ளாட்சித் தேர்தலுக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெறுவதால் அன்றைய தினம் நடைபெறவுள்ள பத்தாம் வகுப்பு / மேல்நிலை இரண்டாம் ஆண்டு ஆங்கிலப் பாடத் திருப்புதல் தேர்வு **17.02.2022 (வியாழக்கிழமை)** அன்று நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

எனவே, பத்தாம் வகுப்பு / மேல்நிலை இரண்டாம் ஆண்டு ஆங்கிலப் பாடத்திற்கான தேர்வுத்தேதி மாற்றம் குறித்த விபரத்தினை முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்களது ஆளுகைக்குட்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்கள் வாயிலாக அனைத்து பள்ளி மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் அறியும்வகையில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஓம்/–
**இயக்குநர்**

**நகல்:**

1. அனைத்து மாவட்டஅரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்

– தகவலுக்காகக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும்